# 222

## ஆகஸ்ட் 2017

நேரம்- பத்து நிமிடங்கள்
(பெரும மதிப்பெண்கள்:100)

*கீழ்க்கண்டவற்றை இரட்டை வரி இடைவெளியில், பத்து டிகிரி இடது ஓரம் விட்டு, தட்டச்சு செய்க. (பிழையின்றியும், அழகுறவும் தட்டச்சு செய்வதில் தனிக்கவனம் செலுத்தப்பட வேண்டும்):-*

சிரியாவில் கடந்த 2016–ஆம் ஆண்டில் மட்டும் உள்நாட்டுப் போரில் பல சிறுவர், சிறுமிகள், குழந்தைகள் பலியாகியுள்ளனர் என யுனிசெப் நிறுவனம் தெரிவித்துள்ளது. எந்த ஒரு பாவமும் அறியாத 850–க்கும் மேற்பட்ட சிறுவர்கள் அந்நாட்டின் கிளர்ச்சியாளர்கள் படையில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக யுனிசெப் நிறுவன ஆய்வில் தெரிய வந்துள்ளது. அண்மையில் போர் முனையில் சிக்கிய ஒரு சிறுவனின் இரு கால்களும் துண்டாகி இரத்தம் ஆறாக ஓடிக் கொண்டிருக்க அவன் கூக்குரலிடுவதைத் தொலைக்காட்சியில் கண்ட எந்த ஒரு மனிதனும் கண்ணீர் விடாமல் இருந்திருக்க முடியாது. பிஞ்சுகளைப் பயன்படுத்தி உலகளவில் தீவிரவாதிகள் தங்களது வெறியைத் தணித்து வருகிறார்கள்.

உலகம் ஒரு பக்கம் புவி வெப்பமயமாதலால் பேரழிவைச் சந்திக்கும் நிலை ஏற்பட்டுள்ள தருணத்தில் ஏற்கெனவே ஒவ்வொரு நாடும் தனது சுயபலத்தை நிரூபிக்கும் வகையில் கடலில் அணுகுண்டுகளைத் தாங்கிச் செல்லும் ஏவுகணை சோதனை நடத்துவது, பாலைவனங்களில் அவற்றின் வீரியத்தைக் கண்டறிவது போன்ற இயற்கைக்கு மாறான செயல்களில் வேண்டுமென்றே ஈடுபட்டு வருவது உலக சுகாதார ஆர்வலர்கள் இடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கெனவே இரு உலகப் போரை நாம் சந்தித்து விட்டோம். முதல் உலகப் போரில் நேச நாடுகள் என்றழைக்கப்பட்ட பிரான்ஸ், ரஷியா, பிரிட்டன் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளும் மைய நாடுகள் என்றழைக்கப்பட்ட ஆஸ்திரியா, ஹங்கேரி, ஜெர்மனி, இத்தாலி ஆகிய நாடுகளும் எதிரெதிர் பக்கங்களில் நின்று போரிட்டன. புதிய தொழில் நுட்பங்களின் வழிவந்த இயந்திரத் துப்பாக்கிகள், உயர் தரமான கனரக பீரங்கிகள், மேம்பட்ட போக்குவரத்து வான்வழிப் போர்முறை, நீர்மூழ்கிகள் போன்றவை போரின் தாக்கத்தைப் பெரிதும் அதிகப்படுத்தின.

இரண்டாம் உலகப் போரில் பொதுமக்கள், இராணுவத்தினர் என ஐம்பது லட்சத்துக்கும் மேல் இறந்தனர். எங்கு பார்த்தாலும் இரத்த ஆறு ஓடியது. எனவே இதுபோன்ற நிலை மீண்டும் ஏற்படாத வகையில் உலக நாடுகளுக்கிடையே பரஸ்பர நல்லுறவு ஏற்படுத்தும் நோக்கில் ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்டது. இருப்பினும்



[திருப்புக...

Scanned by CamScanner

அமெரிக்கா–ரஷியாவின் பனிப்போர் காரணமாக மூன்றாம் உலகப் போர் நிகழுமோ என்ற அச்சம் நிலவி வந்தது. ஆனால் தற்போது அந்த அச்சம் மறைந்து வடகொரியா–சீனாவால் மீண்டும் உலகப்போர் நிகழ்ந்திடுமோ என்ற சூழல் உருவாகியுள்ளது. இனி அப்படியொரு போர் மூண்டால் உலக நாடுகள் தங்களிடம் குவித்து வைத்திருக்கும் அணு ஆயுதங்களைப் பயன்படுத்தும். அவ்வாறு பயன்படுத்தும்போது மனித இனமே அழிந்து விடும்.

உலகின் வல்லரசான அமெரிக்காவுக்கு எதிராக கொரிய தீபகற்பத்தில் வடகொரியாவும் அரபு நாடுகளில் ஈரானும் மறைமுக ஆயுதப் போட்டியை நடத்தி வருகின்றன. அண்மையில் ஈரான், இராக்குக்கு எதிராக பாரசீக வளைகுடாவில் நவீன அதிவேக போர்க்கப்பலை நிறுத்தி பதற்றத்தை ஏற்படுத்தியது நினைவிருக்கலாம். வட கொரியாவோ தொடர்ந்து ஐ.நா.வின் அறிவுரையையும் ஏற்க மறுத்து ஐந்து முறை அணு ஆயுத ஏவுகணை சோதனையில் ஈடுபட்டது. இதனிடையே இரு மாதங்களுக்கு முன் வட கொரியா நிகழ்த்திய அணு ஆயுத சோதனைக்கு பதிலடி கொடுக்கும் வகையில் தென் கொரியாவில் தனது சக்தி வாய்ந்த குண்டு வீச்சு விமானங்களை அமெரிக்கா பறக்க விட்டது. இவை தவிர சிரியாவில் கடந்த 2011 முதல் அரசுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் உள்நாட்டுப்போர் நடந்து வருகிறது. இதுவரை அங்கு இராணுவ வீரர்கள், அரசுக்கு ஆதரவாக சண்டையிட்டு வரும் ஆயுதக் குழுவினரும், பயங்கரவாதிகள் பலரும் பலியாகியுள்ளனர். சீனாவோ ஜப்பான் தீவுகளுக்குச் சொந்தம் கொண்டாடி வருகிறது. சமூக ஆர்வலர்கள் மூன்றாம் உலகப் போர் என ஒன்று தோன்றி அணு ஆயுதங்களைக் கொண்டு போரிட்டால் நான்காம் உலகப் போரானது வில், அம்புகளைக் கொண்டோ, வெறும் குச்சிகளும் கற்களும் கொண்டோ தான் நடைபெறும் என வர்ணிக்கிறார்கள். இரண்டாம் உலகப் போரில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்த ஜப்பான் அமெரிக்காவின் துறைமுகம் மீது நடத்திய தாக்குதலால் ஆவேசமடைந்த அமெரிக்கா ஜப்பானின் ஹிரோசிமா நகரம் மீது அணுகுண்டினை வீசியதில் ஆயிரக்கணக்கானவர்கள் மாண்டதும், அதன் பின்னரும் கதிர்வீச்சால் பலர் இறந்ததும் சரித்திரம் கூறும் உண்மை. மேலும் இன்னொரு அணுகுண்டை ஜப்பானின் துறைமுக நகரமான நாகசாகி மீது வீசியதன் விளைவாக ஜப்பான் சரணடைந்தது.

* * *

198/41-2

Scanned by CamScanner